## ‘தமிழ்வெல்லும்’ என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரர்

# முத்தமிழறிஞர் கலைஞருக்கு இணையான தலைவர் உலகத்தில் எங்கும் இல்லை!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு புகழாரம்!

**சென்னை, ஜூன். 19-**

**“60 ஆண்டு காலம் மக்கள் பிரதிநிதி - நின்ற 13 தேர்தல்களிலும் வென்ற ஒரே தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இணையான தலைவர் உலகத்தில் எங்கும் இல்லை” என்று சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.**

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

‘தமிழ் வெல்லும்’ என்ற தாரக மந்திரத்திற்குச் சொந்தக்காரர். 60 ஆண்டு காலம் மக்கள் பிரதிநிதியாக இருந்தவர்; நின்ற 13 தேர்தல்களிலும் வென்ற ஒரே தலைவர், ஜனநாயகத்தில் உலகத்திலேயே அண்ணன் கலைஞர் அவர்கள் மட்டும்தான். கலைஞருக்கு இணையான தலைவரை உலகத்தில் எங்குத் தேடிப் பார்த்தாலும் கிடைக்கவில்லை. அவருக்கு இணை அவர்தான்!

இந்திய வரலாற்றின் போக்கை மாற்றிக் காட்டியவர் நம்முடைய அருமை அண்ணன் கலைஞர் அவர்கள். ஏனென்றால், இந்தியாவில் பெரும்பான்மையான பிரதமர்களையும், குடியரசுத் தலைவர்களையும் உருவாக்கிய வரலாறு, கோபாலபுரத்து கோமகனாக இருக்கிற என் தலைவர் கலைஞரையே சேரும்.

‘தமிழர்’ என்ற ஒரே ஒரு சொல் அடையாளத்தைக் கொண்டு, இந்த ஜாதி, அந்த ஜாதி, மேல் ஜாதி, கீழ் ஜாதி, இது ஒதுக்கப்பட்ட ஜாதி, இது நடு ஜாதி என்று பார்க்காமல், அத்தனை பேரையும் ஒரே குடையின் கீழ் “தமிழர்களே, தமிழர்களே!” என்று அரவணைப்போடு அழைத்தார் நம்முடைய அண்ணன் கலைஞர் அவர்கள். அதனால், அவரை ‘தமிழ் ஞானத் தந்தை’ என்று சொன்னால் கூட அது மிகையாகாது.

### அறிவியக்கமாகத் திகழும் திராவிட இயக்கம்!

இது ஒரு அறிவியல் இயக்கம். அதனால்தான், வடசென்னையில் உள்ள ராயபுரத்தில் இருந்த தலைமை நிலையத்திற்கு அண்ணா அவர்கள், ‘அறிவகம்’ என்று பெயரிட்டார். அவரது வழித்தோன்றலாக இருக்கிற, இன்றைய பிறந்தநாள் விழாவின் நாயகன் அண்ணன் கலைஞர் அவர்கள், அண்ணாசாலையில் கண்ட தலைமைக்கழகத்திற்கு ‘அண்ணா அறிவாலயம்’ என்று பெயர் வைத்தார்.

கல்வி கற்றால்தான் அறிவு பெருகும்; அறிவு பெற வேண்டும் என்று சொன்னால் கல்விக்கூடம் தேவை. கல்விக்கூடம் இல்லை என்றால் அறிவு வளராது. எனவே, கல்விக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று நினைத்த இயக்கம் திராவிட இயக்கம். மூவேந்தர்கள் ஆண்ட போதும் சரி, அதற்குப் பின்னால் ஆண்டவர்களும் சரி, எந்தக் காலமாக இருந்தாலும், தமிழ்நாட்டில் படிப்பறிவு கிடையாது. முதன்முதலில் நாம் படிக்க வேண்டும் என்று நினைத்தவர்கள் பிரிட்டிஷ்காரர்கள்தான். ஆங்கிலேயர் காலத்தில் தான் முதன்முதலாகப் பள்ளிக்கூடங்கள் உருவாகின.

### தமிழகக் கல்வி வளர்ச்சியின் வரலாற்றுப் பின்னணி!

1901 பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில், 100 பேரில் எத்தனை பேர் படித்தார்கள் என்றால், ஏழு பேர்தான் படித்தார்கள். அதுவும் பட்டப் படிப்பு என்று நினைத்து விடாதீர்கள்; ஏதோ கை எழுத்துப் போடத் தெரியும்; ஐந்தாவது வரைக்கும் படித்திருப்பார்கள்.

அந்தப் படிப்பு கூட, அந்த ஏழு பேரில் யாருக்குக் கிடைத்தது என்று சொன்னால், முற்போக்கு என்று நம்மை அடிமைப்படுத்தியிருந்த இன மக்கள்தான் ஆறு பேர் படித்தார்கள்; நம்முடைய ஆட்கள் ஒருவன்தான் படித்திருந்தான்.

1921ஐ எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், எட்டு பேர்தான் படித்திருக்கிறார்கள். 1931ஐ எடுத்தால் ஒன்பது பேர் படித்திருக்கிறார்கள். 1952இல் நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் படித்தவர்களுடைய எண்ணிக்கை 15 பேர்; அதாவது 100க்கு 15 பேர்தான் படித்திருந்தோம்.

### குலக்கல்வித் திட்டத்தை உடைத்தெறிந்த காமராஜரும் திராவிட இயக்கமும்!

இதுவே 1952இல் முதலமைச்சராக இருந்த ராஜாஜிக்கு பிடிக்கவில்லை. “நீங்கள் எல்லாம் என்ன படிப்பது? உங்களுக்குப் படிப்பே வராது, அதனால் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறேன்” என்று சொல்லி, குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

அவன் அப்பா என்ன ஜாதியோ, அந்த ஜாதித் தொழிலைத்தான் நீ செய்ய வேண்டும்; மண்பாண்டம் செய்கிற குயவராக இருந்தால், நீ மண்பாண்டம் செய்; சிகை அலங்காரம் கடை நடத்திக் கொண்டிருக்கின்ற என்னுடைய அன்புச் சகோதரராக இருந்தால், சிகை அலங்காரம் கடை வைத்துக் கொள்; தச்சுதான் உன்னுடைய குடும்பத் தொழில் என்றால், அதைச் செய் என்று குலத்தொழில் திட்டத்தை 1952இல் ராஜாஜி கொண்டு வந்துவிட்டார். அப்போதே நம்மை படிக்கக் கூடாது என்று நினைத்தார்.

அதற்குப் பின்னால் வந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்தான், 1954இல் அனைத்து கிராமங்களிலும் பள்ளிக்கூடம் வேண்டும் என்று நினைத்தார். அதனால் கிராமங்களிலே பள்ளிக்கூடங்கள் வந்தன.

இதை உணர்ந்த திராவிட இயக்கம், 1967இல் ஆட்சிக்கு வந்தது. “படி, படி” என்று சொன்னவர் அண்ணா அவர்கள்; ஆனால் காலம் அவரை நம்மிடமிருந்து விரைவாகப் பிரித்துவிட்டது. 1969இல் அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, “படி, படி” என்று சொன்னவர் பெரியார்; “எழுது, எழுது” என்று எழுதியவர் அண்ணா; இவை இரண்டையும் சேர்த்து, “கல்லூரி தேவை” என்று சொன்னார்.

### சமத்துவக் கல்வியும் கலைஞர் உருவாக்கிய கல்வி அமைப்பும்! (System)

அதனால்தான் அவர் ஒரு சிஸ்டத்தைக் கொண்டு வந்தார். ஒரு பள்ளிக்கூடம் என்று சொன்னால், ஒரு கிலோமீட்டருக்கு ஒரு தொடக்கப் பள்ளி இருக்க வேண்டும்; 3 கிலோமீட்டருக்கு ஒரு நடுநிலைப் பள்ளி இருக்க வேண்டும்; 5 கிலோமீட்டருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும்; 8 கிலோமீட்டர் இருந்தால் ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்தார். அனைத்து ஜாதியினரும் படிக்க வேண்டும் என்று சொன்னவர் கலைஞர்.

சென்னையில் இருக்கிற உங்களுக்கு இதெல்லாம் தெரியாது. நான் கிராமத்தில் பிறந்தவன்; திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் 9 கிலோமீட்டரில் இருக்கிற ‘...’ என்ற பஸ் செல்லாத ஊரில் பிறந்தவன்.

பள்ளிக்கூடத்தில்கூடத் தீண்டாமை தலைவிரித்து ஆடிய காலங்கள் எல்லாம் உண்டு. அப்படிப்பட்ட நிலையில் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான், ஒரு பள்ளிக்கூடம் என்று சொன்னால் அனைவரும் ஒரே பெஞ்சில் உட்கார வேண்டும் என்றார்கள். எங்கள் ஊரில் நான் மிகவும் பெரிய வீட்டுப் பிள்ளை. அதனால், அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவில்லை. பெரிய வீடாவது, சின்ன வீடாவது; அனைவரையும் ஒன்றாக உட்கார சொன்னார் ஆசிரியர். இதுதான் நிலைமை.

ஜாதியை ஒழித்து, பள்ளிக்கூடத்தில் அனைவரும் சமம் என்று சொன்னது கழக ஆட்சி; கலைஞர்தான் அதைக் கொண்டு வந்தார். காலப்போக்கில் இதையெல்லாம் நாம் மறந்துவிடுகிறோம்.

### தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் சந்திரபாபு நாயுடுவின் பாராட்டும்!

எங்கள் ஊரில் ஒருவன் கல்லூரிக் கல்வி படிக்க வேண்டும் என்றால், ஒன்று சென்னை மாநிலக் கல்லூரிக்கு வர வேண்டும், இல்லையென்றால் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குத்தான் செல்ல வேண்டும்; 100 கிலோமீட்டருக்குள் கல்லூரியே இல்லை; இதுதான் எங்கள் ஊர் நிலைமையே.

ஆனால் இன்றைக்கு, தமிழ்நாட்டில் நகராட்சி எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் கலைக் கல்லூரிகள்; மாவட்டத் தலைநகரங்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் மருத்துவ கல்லூரிகள்; இன்றைக்கு கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் என்று போட்டி போட்டுக் கல்லூரிகள் வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் கழக ஆட்சி, கலைஞர். அதை யாரும் மறந்துவிட முடியாது.

ஏனென்றால், நம்மை அறிவாளிச் சமுதாயமாக உருவாக்க வேண்டும் என்று எண்ணியவர் அண்ணன் கலைஞர். அதனால்தான், 1997இல் அவர் முதலமைச்சராக இருந்த போது, கணினிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். அதனால்தான், கல்லூரிகளிலெல்லாம் தகவல் தொழில்நுட்பம், கணினிப் படிப்புகளை பாடத்திட்டத்தில் கொண்டு வந்தார். ஐ.டி., எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் போன்ற புதிய உட்பிரிவுகளைக் கொண்ட உலகத்தரம் வாய்ந்த பாடத்திட்டத்தைக் ஒவ்வொரு கல்லூரியிலும் கொண்டு வந்தார். அதன் விளைவாக, நம் பிள்ளைகள் ஐ.டி. படித்த காரணத்தினால்தான், இன்றைக்கு அமெரிக்கா, ஜெர்மனி போன்ற வெளிநாடுகளிலும், இந்தியாவில் எந்த மாநிலத்திற்குச் சென்றாலும் உயர்பதவிகளில் இருக்கிறார்கள்.



ஒருமுறை ஆந்திராவினுடைய முதலமைச்சராக இருக்கிற அண்ணன் சந்திரபாபு நாயுடு அவர்களே சொன்னார், “இன்றைக்கு உலகத்தில் எங்கு சென்றாலும் தமிழன் என்று ஒருவன் இருக்கிறான்; அந்தத் தமிழன் அங்கிருப்பதற்குக் காரணம் என்னவென்றால், கலைஞரும் அண்ணாவும் கொண்டு வந்த இருமொழிக் கொள்கைதான்; ஒன்று ஆங்கிலம், இன்னொன்று தமிழ். தாய்மொழியான தமிழை நாம் பேசுகிறோம்; ஜப்பான், அமெரிக்கா எங்கு சென்றாலும் இணைப்பு மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. இந்த இருமொழிக் கொள்கை தமிழ்நாட்டில் இருந்த காரணத்தினால்தான் இவ்வளவு பேர் உலக அரங்கிற்கு வந்திருக்கிறார்கள்” என்று நான் சொல்லவில்லை, ஆந்திராவில் இருந்த முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களே ஒரு பேட்டியில் சொன்னார்.

இன்றைக்கு உலக அளவிலே பெரியாட்கள் இருக்கிற காரணத்தினால்தான், தமிழ்நாடாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி, இன்றைக்குப் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்திருக்கிறோம் என்று சொன்னால், வெளிநாட்டிலே பணியாற்றுகிற அத்தனை பேரும் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் டாலர் கணக்காகப் பணத்தை அனுப்புகிற காரணத்தினால்தான், இங்கே பொருளாதாரம் முன்னேறி இருக்கிறது.

### பத்து தலை இராவணனும் பன்முகக் கலைஞர் அவர்களும்!

அப்படிப்பட்ட அண்ணன் கலைஞர் அவர்களுடைய பரிணாம வளர்ச்சி என்று சொன்னால் பலவற்றைச் சொல்லலாம். நான் எப்போதும் சொல்லுவேன், ‘பத்து தலை இராவணனை’ நாம் நேரில் பார்த்ததில்லை; அவனது ஆற்றலைப் பற்றிப் பேசுகிற போது, பத்து தலை இராவணன் என்று சொல்லுவார்கள். பத்து தலை இருந்ததா என்றால், பத்து தலை அல்ல; அவனுடைய பரிணாம வளர்ச்சி, அவன் பன்முகத் திறமை கொண்டவன். அப்படிப்பட்ட ஆற்றலாளன், வீரன், விவேகன், இசைவாணன், இலக்கியவாதி என்பது தான் பத்து தலை இராவணன் என்று சொல்வார்கள். ‘பன்முகம் கொண்டவன்’ என்பதற்குப் பதிலாக எளிமையாகப் பத்து தலை இராவணன் என்று சொல்வார்கள்.

அப்படிப் பார்த்தோம் என்று சொன்னால், பன்முகமும் தெரிந்திருக்கிற இலக்கியவாதியாக இருக்கலாம்; திரைப்படவாதியாக இருக்கலாம்; வசனகர்த்தாவாக இருக்கலாம்; நாடக ஆசிரியராக இருக்கலாம்; எழுத்தாளராக இருக்கலாம்; சிறந்த நிர்வாகியாக இருக்கலாம்; இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சரில் முதலிடத்தில் இருப்பவராக இருக்கலாம். இப்படிப் பன்முகம் கொண்ட தலைவர் யார் என்று சொன்னால், அது கலைஞர் மட்டும்தான்; அவருக்கு இணையானவர் யாரும் கிடையாது. அவர் பெரிய எழுத்தாளர், இலக்கியவாதி; ... திரைப்பட வசனகர்த்தா மட்டுமல்ல, 28க்கும் மேற்பட்ட திரைப் படங்களைத் தயாரித்திருக்கிறார். அப்படிப்பட்ட பன்முகத்தன்மை கொண்ட தலைவர் அண்ணன் கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்னும் சொல்லப்போனால், அவர் ஒரு இலக்கியவாதி. நான் அவரை ‘தமிழ் ஞானத் தந்தை’ என்று சொன்னதற்கு ஒரே காரணம், அங்கே கடைசி வரிசையில் இருக்கிற தொண்டர்களும் சரி, என்னையும் சரி, ஏன் தமிழ்நாட்டில் இருக்கிற ஒட்டுமொத்த தமிழனையும் சரி, இல்லை இல்லை உலகத்தில் இருக்கிற அத்தனை தமிழனையும், “உடன்பிறப்பே வா!” என்ற ஒற்றைச் சொல்லிலேயே நம்மைக் கட்டிப் போட்ட தலைவன் அந்தத் தலைவன். அப்படிப்பட்ட தலைவருக்கு இங்கே சிறப்பான பிறந்தநாள் விழாவை நம்முடைய சேகர்பாபு அவர்களும், அவரோடு சேர்ந்த உடன்பிறப்புகளும் மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### 1991-ஆம் ஆண்டின் சோதனையும் பீனிக்ஸ் பறவையான தி.மு.க.வும்!

எனக்கு துறைமுகம் என்று சொன்ன உடனே, ஒன்று நினைவு வந்தது. தம்பி செந்தில்வேலன் இங்கே பேசுகிற போது மிகச் சிறப்பாகப் பேசினார். தொண்டர்கள் எல்லாம் உற்சாகப்படுகிற அளவுக்குத் தன்னுடைய உரையை அமைத்துக் கொண்டிருந்தார். நம் ஆட்கள் எங்கே சோர்வடைந்திடப் போகிறார்களே என்ற காரணத்தினால் தூக்கி நிறுத்தினார். அவருடைய வார்த்தைகளை எல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். “துவண்டு விடாதீர்கள்; இதோ வருகிறது உள்ளாட்சித் தேர்தல், அதிலே நம்முடைய திறமைகளை, நம்முடைய ஆற்றலைக் காட்டுவோம்” என்று சொன்னார்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு பீனிக்ஸ் பறவை; என்ன ஆனாலும் சரி, இது எழுந்து கொண்டேதான் இருக்கும், இதை ஒன்றும் செய்ய முடியாது. அதற்கு உதாரணம் இந்தத் துறைமுகம் மண்தான். என்ன காரணம் என்று சொன்னால், 1991 பொதுத் தேர்தலில், தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியோடு நின்றாலும் கூட, இரண்டு இடங்களில் தான் வென்றோம்.

அதில் ஒரு இடம் எது தெரியுமா? அன்றைக்கும் நன்றி உணர்வோடு இந்தத் தொகுதி மக்கள் அண்ணன் கலைஞருக்கு வாக்களித்திருந்தார்கள். அந்த நன்றி உணர்வு தொடர்ந்து இந்த மண்ணில் இருக்கிற காரணத்தினால்தான் என் தம்பி சேகர்பாபுவுக்கும் உதயசூரியனுக்கும் ஓட்டுப் போட்டிருக்கிறீர்கள்.

இரண்டே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களோடு நாம் சட்டமன்றத்திற்குள்ளே சென்ற காலகட்டத்தை நான் எண்ணிப் பார்க்கிறேன். நான் ‘பீனிக்ஸ் பறவை’ என்பதை சொற்றொடருக்காகச் சொல்லவில்லை; 1991இல் இரண்டே இரண்டு பேர்தான் தி.மு.க. என்று சட்டமன்றத்திற்குள் சென்றோம். ஆனால் அதற்குப் பின்னால், 1996இல் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணன் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே வெற்றி பெற்றோம். 2006இல் இரண்டாவது முறையாக தி.மு.க. ஆட்சிக்கு வந்தது.

### உணவுத்துறை அமைச்சராகப் பணியாற்றிய நினைவுகள்!

அதில் அடியேன் ஆகிய நான், கூட்டுறவு மற்றும் உணவுத்துறை அமைச்சராக இருந்து, சிறப்பாக, ஏன் உச்ச நீதிமன்றமே பாராட்டும் அளவுக்கு அந்தத் துறையைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தேன். ஏன் என்றால், அமைச்சருக்கு என்ன துறை என்று தெரியவில்லை என்று செந்தில்வேலன் மிகவும் வருத்தப்பட்டார்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அந்தத் துறையை நான் எடுக்கிறபோது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் எனக்கு அங்கே துண்டு போட்டுக் கொண்டிருந்தார்கள்.. ஆரணி சட்டமன்ற உறுப்பினர் சிவானந்தம், எனக்குத் துண்டைப் போட்டுவிட்டு கட்டி அழுதார். “நம்முடைய அண்ணன் அமைச்சர் ஆகிவிட்டார், அதுவும் இரண்டு துறைகளைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்” என்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார் என்று பார்த்தேன், அவர் “மகிழ்ச்சி மகிழ்ச்சி” என்றார்.

அவர் “ஒரு நிமிடம் வாருங்கள்” என்றார். “என்ன” என்றேன். “ஐயோ! இந்தத் துறை யாருக்கும் சரியாக வராதத் துறை ஆயிற்றே? அமைச்சராக இருப்பவர்கள் பாதியிலேயே சென்றுவிடுவார்களே... இந்தத் துறையை உனக்கு எதற்கு கொடுத்தார்கள்? அதுவும் நம்முடைய மாவட்டத்திற்கு சரியாக இருக்காதே?” என்றார். “என்ன விஷயம்” என்றேன். உணவுத் துறையில் ... இருந்தார். பாதியிலே போய்விட்டார். அதிலும் அவர் எங்கள் மாவட்டத்துக்காரர். ... என்று ஒரு அமைச்சர் இருந்தார். உணவுத் துறை அமைச்சராக டெல்லிக்குச் சென்றார், அவர் திரும்பி வரும்போது அமைச்சர் பதவி இல்லாதவராக வந்தார் என்றார்.

இன்னும் சொல்லப்போனால், திறமைக்கே ஒட்டுமொத்த உருவமாக இருக்கிற என் அண்ணன் ஆர்க்காட்டார் கூட உணவு அமைச்சராக இருந்திருக்கிறார். அதுவும் இடையில் போய்விட்டது. அன்றைக்குத் தான் அமைச்சர் ஆகியிருக்கிறேன், இந்த மூன்றையும் என்னிடம் சொல்லி, “ஒத்து வராதத் துறையை எதற்கு அண்ணா உனக்குக் கொடுத்தார்கள்” என்றார். ஆனால், ஐந்து ஆண்டு காலம் அண்ணன் கலைஞருடைய அறிவுரையோடு, உச்ச நீதிமன்றமே பாராட்டும் அளவுக்கு நடத்தினேன். ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’, ‘தி இந்து’ பத்திரிகைகள் எல்லாம் முழுப் பக்கத்திற்கு, “பொது விநியோகத் திட்டத்திற்குத் தமிழ்நாடுதான் உதாரணம்” என்று எழுதினார்கள்.

### எழப் போகும் உதயசூரியனும், தளபதியின் அடுத்த கழக ஆட்சியும்!

எனவே, இரண்டே இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற்ற பின்பு, 1996இல் நாம்தான் ஆட்சியைப் பிடித்தோம், 2006இலும் தி.மு.க.தான் ஆண்டது. 2021இல் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கிற ‘திராவிட மாடல்’ ஆட்சி, தமிழ்நாட்டு முதலமைச்சர் என் அண்ணன் மு.க.ஸ்டாலின் தலைமையிலே சிறப்பாக நடைபெற்றது.

இரண்டு பேர் வெற்றி பெற்ற போதே நாங்கள் மூன்று முறை ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்றால், இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஏறத்தாழ 59 பேரோடு உள்ளே செல்கிறோம் என்று சொன்னால், நான் சொல்கிறேன், எழுதி வைத்துக் கொள்ளுங்கள்; அடுத்து நடைபெறுகிற சட்டமன்றத் தேர்தலில், இதே சட்டமன்றத்திலே உதயசூரியன் மீண்டும் மலரும்! தமிழ்நாட்டின் முதலமைச்சராக அருமை அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் வருவார். நம்பிக்கை தான் வாழ்க்கை, வாழ்க்கையே நம்பிக்கைதானே; நிச்சயம் கழக ஆட்சி மீண்டும் வரும்.

### கரூரின் சோகமும் தலைவரின் தாய் உள்ளமும்!

மாண்புமிகு முதலமைச்சர், இப்படிச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். மிஸ்டர் சி.எம். சார்... இல்லாததும் பொல்லாததும் எல்லாம் எங்களிடத்தில் சொன்னீர்கள். நான் உள்ளபடியே ஒப்புக் கொண்டு பேசுகிறேன்; ஒரு கணம் நாங்கள் ஏமாந்துவிட்டோம்.

நாங்கள் ஏமாந்துவிட்டோம் என்று சொல்வதை விட, தமிழ்நாட்டு முதலமைச்சருடைய தாய் குணம் அதற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது. 41 பேர் கரூரிலே இறந்திருக்கிறார்கள்; காவல்துறை வழக்குப் பதிவு செய்ய வேண்டுமா, இல்லையா? அதிகாரிகள் எல்லாம் எஃப்.ஐ.ஆர். போட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், என் தலைவனுடைய பேட்டியை நீங்கள் பார்த்திருப்பீர்கள், “எந்தக் கட்சித் தலைவனாவது தன் தொண்டன் சாக வேண்டும் என்று எதிர்பார்ப்பானா? எந்தக் கட்சித் தலைவனாவது தன் தொண்டன் சாக வேண்டும் என்று சதி செய்வானா?” என்று சொல்லி, அத்தனை பேரும் எஃப்.ஐ.ஆர். போட வேண்டும் என்று சொன்ன போது கூட, “அவர் மீது எஃப்.ஐ.ஆர். போட வேண்டாம்” என்று சொன்ன தாய் உள்ளம் கொண்ட தலைவர். ஒரு கணம் அன்றைக்குப் எஃப்.ஐ.ஆர். போட்டிருந்தால், இன்றைக்கு நிலைமையே வேறாக மாறி இருக்கும்.

### கொள்கை விரோதியும் அரசியல் விரோதியும்: ஒரு விளக்கம்!

அவர் அனைத்து மேடைகளிலும் சொன்னார்; “டெல்லியில் இருக்கிறவர்கள் எல்லாம் கொள்கை விரோதியாம்; இங்கே இருக்கிற நாம் அரசியல் விரோதியாம்!” ஐயா, இந்த ஒரு வார்த்தைக்கு மட்டும் நான் பலமுறை அறையில் தனியாக உட்கார்ந்து சிந்தித்து சிந்தித்தே என் தலைக்கு மேல் இருக்கிறது எல்லாம் போய்விட்டது. இந்த வார்த்தைக்கு என்னதான் பொருள்?

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நம்மோடு இருந்தார்; அண்ணன் கலைஞருடைய 40 ஆண்டு கால நண்பர் அவர். இன்னும் சொல்லப்போனால், திரையுலகத்திலே இரண்டு பேரும் நண்பராக இருந்த காரணத்தினால்தான், அன்றைக்கு அவரைப் பக்குவப்படுத்திப் பேரறிஞர் அண்ணாவிடத்திலே கொண்டு வந்து, மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்த்தார். அது வரலாறு! 1953இல் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இணைத்துக் கொண்டார்கள். திரையுலகத்திலே எம்.ஜி.ஆரும் அண்ணன் கலைஞரும் நண்பர்கள்; ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று எண்ணியவர்கள்.

அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வர வேண்டும் என்று அண்ணாவுக்குப் பின்னால் போட்டி போட்ட காலத்திலே, பரங்கிமலை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக ஒருமுறை அல்ல, இரண்டு முறை உதயசூரியன் சின்னத்தில் நின்று வென்றவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக அண்ணன் கலைஞர் இருந்த போது, பொதுச்செயலாளராக நாவலர் இருந்த போது, பொருளாளராக தி.மு.க.வில் இருந்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். எனவே, தி.மு.க. எம்.எல்.ஏ, தி.மு.க.வினுடைய பொருளாளர், 40 ஆண்டு கால திரையுலகத்தின் மூலமாக என் அண்ணன் கலைஞருக்கு நண்பர்.

ஒரு அமைச்சர் அந்தஸ்தில் இருக்க வேண்டும் என்பதற்காக, தன்னுடைய நண்பருக்குச் சிறுசேமிப்புத் திட்டத்தின் துணைத்தலைவர் பதவியைக் கொடுத்தவர். அவருக்கும் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும் இடைவெளி ஏற்பட்ட போது வெளியே போய், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., “எனக்கும் அவருக்கும் அரசியல் விரோதம்” என்று சொன்னால் கூட அது பொருத்தமாக இருந்திருக்கும். “எனக்கும் என்னுடைய நண்பர் கலைஞருக்கும் அரசியல்ரீதியாக எங்களுக்குள் விரோதம்” என்று சொன்னால் கூட அது பொருத்தமாக இருக்கும்.

### தி.மு.க.வை விமர்சிக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள்!

நான் கேட்கிறேன், மாண்புமிகு மிஸ்டர் சி.எம். சார்! நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே கிளைச் செயலாளராக இருந்தவரா? வட்டச் செயலாளரா? பகுதிச் செயலாளரா? மாவட்டச் செயலாளரா? செயற்குழு உறுப்பினரா? பொதுக்குழு உறுப்பினரா? அணி அமைப்பாளரா? தி.மு.க.வுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?

எங்களை ‘அரசியல் விரோதி’ என்று நாடு முழுவதும் பறைசாற்றினீர்களே! நாங்கள் முதலமைச்சராக இருந்த அண்ணன் இடத்திலே கேட்டோம், ஒரு பக்கம் செய்தி சென்றுகொண்டே இருக்கிறது. “அண்ணா, அவர்களை விமர்சிக்க விடுங்கள்” என்று நாங்கள் கேட்ட போது, “இல்லை, அதை இக்னோர் செய்யுங்கள், அது ஒரு பெரிய விஷயமல்ல; நாட்டு மக்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது; நாட்டு மக்களுக்கு அனைத்துமாக நான் இருக்கிறேன்; எனக்காக அவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது; அவரை விமர்சிக்கக் கூடாது” என்று சொன்ன தாய் உள்ளம் கொண்ட தலைவர். நாங்கள் விமர்சித்து இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?

### தேர்தல் வாக்குறுதிகளும் விசிலுக்கு விழுந்த ஓட்டுகளும்!

அதோடு மட்டுமல்ல, ஏதோ மக்கள் ஏமாந்தார்கள். “நண்பா, நண்பி, குட்டீஸ்” என்று குழந்தைகளைத் தன்வசப்படுத்தி, “உங்கள் அப்பா அம்மாவிடம், உங்கள் அத்தை மாமாவிடம், உங்கள் தாத்தா பாட்டியிடம், சாக்லேட்டுக்காக நீ அழ மாட்டாயா? அதேபோன்று, விஜய் மாமாவுக்காக, நீ ஓட்டுக்காக அழுது எனக்கு வாங்கிக் கொடு” என்று அந்த இளம் சிறார்களை அழ வைத்தார்கள்.

நான் ஒரு ஆதாரபூர்வமான செய்தியை இங்கே சொல்கிறேன். ஆழ்வார்பேட்டையிலே என் வீட்டிற்குப் பக்கத்தில் ‘கீர்த்திலால்’ என்று ஒரு கடை இருக்கிறது. அந்தக் கீர்த்திலால் கடைக்குப் பக்கத்தில், ரோட்டில் ஒரு பழக்கூடை வைத்துக் கொண்டு ஒரு 70 வயது மூதாட்டி கடை நடத்தி வருகிறார். என்னுடைய ஓட்டுநரை அனுப்பிப் பழம் வாங்குவது போன்று, “எதற்கு ஓட்டு போட்டீர்கள்?” என்று கேட்டு வரச் சொன்னேன். என் ஓட்டுநர் அந்த மூதாட்டியிடம் ஒரு கிலோ ஆப்பிள் வாங்கிக் கொண்டு, “பாட்டி, நீங்கள் எதற்கு ஓட்டு போட்டீர்கள்?” என்று கேட்டிருக்கிறார்.

அவர் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு, “என் சொந்த ஊர் திண்டிவனம்; நான் மயிலாப்பூருக்கு வாழ்க்கைப்பட்டு வந்தேன். என் வீட்டுக்காரர் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரைக்கும் தி.மு.க.. எங்கள் குடும்பத்தில் 17 ஓட்டுகள் இருக்கின்றன. நாங்கள் காலம் முழுவதும் உதயசூரியனுக்கு ஓட்டுப் போட்டே பழக்கப்பட்ட குடும்பம். ஆனால், இந்த முறை எங்கள் பேரப்பையன் வந்து தொல்லை கொடுத்தான்; ஆயா, இந்த ஒரு முறை மட்டும் விசிலுக்கு ஓட்டுப் போடு ஆயா என்று கெஞ்சினான். ஐயோ, குழந்தைப் பிள்ளை வந்து கேட்கிறதே, அப்படி நானும் எங்கள் வீட்டுக்காரரும் யோசித்தோம். குழந்தை அழுகிறதே... விசில் கேட்கிற குழந்தை; விசிலுக்கு ஓட்டுப் போடு என்று கேட்கிறதே என்று நினைத்தோம்.”

அவர் மேலும் சொன்னார், “இப்போது எனக்கு வயது 70 ஆகிறது, நான் 20 வயதில் வாழ்க்கைப்பட்டு வந்தேன்; அன்றையிலிருந்து நடந்த தேர்தலில் எல்லாம் உதயசூரியனுக்குப் போட்ட இந்தக் கைதான், என் பேரக்குழந்தைக்காக இந்த ஒரே ஒரு முறை விசிலுக்குப் போட்டது. நான் விசிலுக்கு ஓட்டுப் போட்டாலும், தி.மு.க. வராமல் போகாது; அந்த நல்ல மனுஷன் வந்துவிடுவான் என்று நம்பித்தான் அங்கே போட்டேன்” என்று சொல்கிறார். என் தாய் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், இந்தச் சம்பவத்தை நான் காதால் கேட்டேன்; இதுதான் தமிழ்நாட்டின் நிலைமை.

### 24 மணி நேரமும் மக்களுக்காக உழைத்த முதலமைச்சர்!

நான் விசிலுக்கு ஓட்டுப் போட்டால், மு.க. ஸ்டாலின் வெற்றி பெறாமலா போகப் போகிறார்? அவர் கட்டாயம் வெற்றி பெறுவார். நாட்டு மக்களுக்கு

தொடர்ச்சி 6ஆம் பக்கம்